ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044– 25670769
நிகரி : 25675849
இணையதளம் : www.tnrd.gov.in

**கடிதம் (நிலை) எண். 99, நாள் 7.09.2009**

அனுப்புநர்
திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15. வழியாக)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
(சென்னை நீங்கலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை–108.
உறுப்பினர் – செயலாளர், மாநிலத் திட்டக்குழு, சென்னை – 5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, சென்னை–108.
அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், சென்னை–9.

அய்யா/அம்மையீர்

பொருள் : திட்டங்கள் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2009–10 ஆண்டில் செயல்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் வரையறுக்கப்பட்ட கட்டாய பணிகளின் பட்டியலில் பாலப்பணிகளை சேர்த்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009.
2. அரசாணை (நிலை) எண். 90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.8.2009.

––––

பார்வை ஒன்றில் உள்ள அரசாணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை 2009–10ம் ஆண்டில் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. மேலும் பார்வை 2–ல் உள்ள அரசாணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியினை 2009–10ம் ஆண்டு முதல் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.1 கோடியே 50 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியே 70 இலட்சமாக உயர்த்தி ஆணைகள்

வெளியிடப்பட்டன. தற்போது உயர்த்தப்பட்ட ஒதுக்கீடான ரூ. 1.70 கோடியில் கட்டாய பணிகளை மேற்கொள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.85 லட்சத்தை வரையறுக்கப்பட்ட நிதியாகவும், மீதமுள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.85 லட்சத்தை வரையறுக்கப்படாத நிதியாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் சாலைகளில் ஏராளமான ஆறுகளும் வாய்க்கால்களும் குறுக்கிடுவதால், மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளிலிருந்து மக்கள் தங்கள் உயிர்களையும், உடைமைகளையும் பாதுக்காத்துக் கொள்ள வேண்டியுள்ளதால் வாய்க்கால், ஆறுகள் குறுக்கே நடைபாலங்கள், தாம்போகி பாலங்கள், உயர்மட்டப் பாலங்கள் என கட்ட வேண்டிய நிலை உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான வரையறுக்கப்படாத நிதியில் பெருமளவு நிதியை பாலங்களுக்காக ஒதுக்கீடு செய்த போதிலும் தேவை அதிகமாக இருப்பதால் வரையறுக்கப்பட்ட கட்டாய பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் பாலப்பணிகளையும் சேர்க்குமாறு அரசிற்கு கோரிக்கை வரப்பெற்றது.

3. மேற்கண்ட கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலனை செய்து, ஏற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி 2009–10ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009ன் இணைப்பில் பத்தி 2ல் உள்ள வரையறுக்கப்பட்ட கட்டாயப் பணிகளின் வரிசையில் அடுத்த எண்ணாக பாலப்பணிகளை சேர்த்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

அ) ஊரகப் பகுதிகளில் :–

8. வாய்க்கால், ஆறுகள் குறுக்கே நடைப்பாலங்கள், தாம்போகி பாலங்கள், உயர்மட்ட பாலங்கள் கட்டுதலை எடுத்துச் செய்தல்

ஆ) நகர்ப்புற பகுதிகளில் :–

10. வாய்க்கால், ஆறுகள் குறுக்கே நடைப்பாலங்கள், தாம்போகி பாலங்கள், உயர்மட்ட பாலங்கள் கட்டுதலை எடுத்துச் செய்தல்

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சட்டமன்ற பேரவை தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், சென்னை – 9.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
(அனைத்து அமைச்சர்களின் அலுவலகங்களுக்கும்).